<u>**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.**</u>

<u>**அ.வ.எண்.90/2017**</u>

இந்நீதிமன்றத்து எழுத்தர் திரு. வினோத், உதவியாளர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2022 ஆண்டு ஜூன் மாதம் 24-ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 24.06.2022**

**பெயர் - அமல் ராஜ்**

**த/பெ - மைக்கல் தாஸ்**

**வயது - 58**

**சாட்சி - PW1**

**ஊர் - ஆட்டந்தாங்கல் / செங்குன்றம்**

<u>**முதல் விசாரணை தொடர்ச்சி-**</u>

நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனது வாக்குமூலம் பிரமான பத்திரம் மூலம் முதல் விசாரணை சாட்சியம் அளிக்கிறேன். எனது வழக்கிற்கு ஆதரவாக கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல். செய்கிறேன். 01.12.2005 தேதியிட்ட செட்டில் மென்ட் பத்திரம் சார்பதிவாளர் செங்குன்றத்தில் பதிவு செய்யப்பட்ட சான்றிட்ட நகலின் பதிவு எண் 6343/2005 வாசா ஆ 1 ஆகவும், (பிரதிவாதி தரப்பில் சான்றிட்ட நகல் குறியீடு செய்ய இயலாது என ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது ). 20.09.2012 தேதியிட்ட செட்டில் மென்ட் பத்திரம் சார்பதிவாளர் செங்குன்றத்தில் பதிவு செய்யப்பட்ட சான்றிட்ட நகலின் பதிவு எண் 11146/2012 வாசா ஆ 2 ஆகவும், (பிரதிவாதி தரப்பில் சான்றிட்ட நகல் குறியீடு செய்ய இயலாது என ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது ). 19.09.2016 தேதியிட்ட எனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு வாசா ஆ 3 ஆகவும், மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பிரதிவாதிகள் அனுப்பிய 18.10.2016 தேதியிட்ட பதில் அறிவிப்பின் அசல் வாசா ஆ 4 ஆகவும், 24.03.1997 தேதியிட்ட கிரைய பத்திரம்

சார்பதிவாளர் செங்குன்றத்தில் பதிவு செய்யப்பட்ட சான்றிட்ட நகலின் பதிவு எண் 1462./1997 வாசா ஆ 5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**(வாதி வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இனங்க மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய ஒத்திவைக்கப்படுகிறது)**